# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடகச் செய்தி எண்.05/2021 நாள்.25.02.2021

தமிழக அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி :

## அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது அதிகரிப்பு
## இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் தமிழக அரசின் அறிவிப்புக்கு கண்டனம்
## அரசாணையை திரும்பப் பெற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசின் பணியாளர்களின் பணியிலிருந்து ஓய்வு பெறும் வயது 59-லிருந்து 60 வயதாக உயர்த்தி தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணை அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொருந்துவதாகவும் இது உடனடியாக அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இச்செயல் வேலையில்லாமல் தவிக்கும் லட்சக்கணக்கான இளைஞர்கள் மீது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

ஏற்கனவே தமிழக அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக கடந்த அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட தமிழக அரசின் செய்திக்குறிப்பில் (செய்தி வெளியீடு எண்.678, நாள்.11.10.2017) அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து, அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும், இதரப் பணியிடங்களில் வெளி முகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ பணி நியமனங்களை மேற்கொள்ள, தக்க பரிந்துரைகளை அளித்திட பணியாளர் சீரமைப்புக்குழு (Staff Rationalization Committee) அமைக்கப்படும் என ஊதியமாற்றத்திற்கு தொடர்பற்ற செய்தி ஒன்றினையும் இணைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு ஆணை எண்.56, நிதித்/(CMC)துறை, நாள்.19.02.2018-ல் பணியாளர் சீரமைப்புக்குழுவினை ஓய்வு பெற்ற IAS அலுவலர் திரு. ஆதிசேஷய்யா தலைமையில் அமைத்தும் ஆணையிட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


இக்குழுவின் பிரதான நோக்கம், அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்களின் பணி நிலைமைகளை ஆராய்ந்து, நிரந்தரப் பணியிடங்களை குறைத்து, ஆண்டுதோறும் அரசின் திட்டங்களுக்கு அத்தியாவசியம் என கருதப்படும் பணியிடங்களில் தற்காலிக / ஒப்பந்த முறையிலான / தொகுப்பூதிய முறைகளில் ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதே எனவும் மேற்படி அரசாணை கூறுகிறது.

இவ்வாண்டின் அரசின் நிதிநிலைக் குறிப்பிலேயே, தற்போது மாநில அரசின் கீழ் செயல்படும் துறைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை(அதாவது காலிப் பணியிடங்களையும் சேர்த்து) 14,26,409 என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சாரந்த துறைகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| தலைமைச் செயலகத்தில் | - | 9166 |
| 146 அரசு துறைகளில் | - | 10,33,826 |
| தமிழ்நாடு தேர்வாணையம் | - | 840 |
| உள்ளாட்சித்துறை ஊழியர்கள் | - | 99,586 |
| சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் | - | 2,82,470 |

மேலே குறிப்பிடப்பட்ட 146 அரசுத் துறைகளில் குறிப்பாக

| | | |
|---|---|---|
| காவல்துறையில் | - | 1,44,480 |
| வருவாய்த்துறையில் | - | 61,320 |
| உள்ளாட்சித்துறையில் | - | 31,247 |
| கல்வித்துறையில் | - | 4,23,077 |
| மருத்துவத்துறையில் | - | 1,20,176 |

பணியிடங்கள் உள்ளதாக அரசு தொவித்துள்ளது. அதாவது 2018-ம் ஆண்டில் முன்மதிப்பீட்டினபடியான தமிழக மக்கள் தொகை 8 கோடியே 88 லட்சத்தில், 1000 மக்கள் தொகைக்கு 16 ஊழியர்கள் என்ற விகிதத்திலேயே பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் 3,00,000 பணியிடங்கள் காலியாக விடப்பட்டுள்ள நிலையில் 1000 மக்கள் தொகைக்கு 13 ஊழியர்கள் என்ற விகிதத்திலேயே தற்போது ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மேலும்மேலும் அரசு ஊழியர்களின் பணிச் சுமையை ஏற்றிக்கொண்டே வருவதுடன் இருக்கின்ற நிரந்தரப் பணியிடங்களின் எண்ணிக்கையையும் குறைத்து அத்துக்கூலியில், வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டுள்ள இளைஞர்களின் உழைப்பை அபகரிக்கும் கீழ்த்தர முயற்சியில் அரசே ஈடுபட முயற்சித்து வருகிறது.

கடந்த காலங்களில் பல்வேறு துறை ஊழியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தபோது அதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் போராடிய அரசு ஊழியர்களையும், மருத்துவர்களையும் பணி மாறுதல் செய்தும், 17பி குற்றக் குறிப்பாணை அளித்தும் அரசு ஊழியர்களின் வாழ்க்கையை சீரழித்துள்ளது தமிழக அரசு. தற்போது கொரோனா வைரஸ் காய்ச்சலால் அவதிப்படும் பொது மக்களின் பாதுகாப்பும், நோக்கம் சிறிதும் இன்றி புதியதாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு பதிலாக தற்போது பணியாற்றும் அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 59லிருந்து 60 வயதாக உயர்த்தி தமிழக அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது தெரிந்திருந்தும் இதுபோன்ற நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபடுகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

இளைஞர்களின் வேலைவாய்ப்பை இழுத்து மூடும் நடவடிக்கையை கண்டித்தும், சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மறுக்கப்படும் மக்கள் நலன்களுக்கு எதிராகவும் போடப்பட்டுள்ள அரசாணையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

இந்த அரசாணையை திரும்பப் பெற தமிழக அரசு மறுக்குமானால் தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள் இளைஞர்களோடு இணைந்து மிகபெரிய போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| (மு. அன்பரசு) | (ஆ. செல்வம்) |
| மாநிலத் தலைவர் | பொதுச்செயலாளர் |